தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27-9-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# வேளாண் பல்கலையில் பசியென்றும் பாராது உழவர்கள் பங்கேற்ற மாநில அளவிலான கருத்தரங்கம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோவையில் தமிழ்நாடு முழுவதும் உள்ள உழவர்கள் பங்கேற்ற மாநில அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் அனைத்து மாவட்டங்களில் உள்ள உழவர்கள் திரளாக கலந்து கொண்டு தமது மாவட்ட விவசாய பிரச்சனைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து, மாநில வேளாண்மை வளர்ச்சிக்கு வழிவகுக்கும் விதமான பல்வேறு கருத்துக்களை அரசின் பார்வைக்கு கொண்டு செல்லும் முகமாக சுமார் 6 மணி நேரத்திற்கு மேல் தொடர்ந்து எடுத்துரைத்த மாபெரும் சாதனை கருத்தரங்கம் இன்று (27-9-2013) பல்கலைக்கழக அண்ணா அரங்கில் நடைபெற்றது.

மாநிலம் முழுவதுமுள்ள சுமார் 300 விவசாயிகள் மற்றும் 200க்கும் மேற்பட்ட வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் வேளாண்மைத் துறை உயர் அலுவலர்கள் இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். தேநீர் மற்றும் மதிய உணவு இடைவேளை என்று எதிர்பாராமல் தொடர்ச்சியாக சுமார் 6 மணி நேரம் காலை 10.00 மணிக்கு தொடங்கி மாலை 4.00 மணி வரை கருத்துக் கேட்புக் கூட்டம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. செ. தாமோதரன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இக்கருத்துக் கேட்புக் கூட்டத்தில் வேளாண்மைத் துறை தொடர்புடைய அரசின் பல்வேறு துறை உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

திரு. செ. தாமோதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தமது சிறப்புரையில் விவசாயிகளின் கருத்தை அறிந்து அதனடிப்படையில் திட்டம் வகுத்து செயல்பட வேண்டும் என்ற தமிழக முதல்வரின் விருப்புக்கிணங்க இந்த கருத்துக்கேட்பு கூட்டமானது, வட்டார அளவில் துவங்கி, மாவட்ட அளவில் வலுப்பெற்று, இன்று மாநில அளவில் நடைபெறுவதாக கூறினார். இந்நிகழ்வில் கூறப்பட்ட அனைத்து கருத்துக்களுமே மாநிலத்தின் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவிகரமானதாக அமையும் வண்ணம் உள்ளது என்றும், நல்ல பல கருத்துக்கள் இதுகாறும் தமிழக அரசின் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களினால் ஏற்பட்ட நன்மைகளையும் அதன் தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய பராமரிப்பு பணிகளையும் எடுத்துக் கூறுவதாக அமைந்தது என்றும் கூறினார். தமிழக விவசாயிகளின் எதிர்பார்ப்புக்கிணங்க கருத்துக்கள் அனைத்தும் தகுந்த முறையில் தொகுக்கப்பட்டு கருத்துருவாக அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மாண்புமிகு தமிழக முதல்வரின் நல்லாசியுடன் செயல்படுத்த ஆவண செய்யப்படும் என்றும் உறுதி கூறினார். வேளாண் துறையுடன் தொடர்புடைய 6க்கும் மேற்பட்ட சகோதரத் துறைகள்

பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் விவசாயிகளின் மற்ற துறைகள் தொடர்புடைய கருத்துக்கள் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும், வரும் காலங்களில் தமிழக வேளாண் வளர்ச்சியானது இந்திய அளவிலே, முன்னோடி மாநிலமாக போற்றும் வண்ணம் அமைய, தக்க செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் தெரிவித்தார். தமிழக முதல்வர் அவர்களின் கூற்றான "மக்களுக்காக திட்டங்களேயன்றி திட்டங்களுக்காக மக்கள் அல்ல" என்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் மாநில வேளாண்மை திட்டங்கள் உருவாக்கப்பட்டு தமிழகம் உணவு உற்பத்தியில் கடந்த ஆண்டுகளைப் போலவே தேசிய அளவில் விருது பெறும் மாநிலமாக அமையும் என்றும் அவர் கூறினார்.

விவசாயிகள் கூறிய பல்வேறு கருத்துக்களில் பொதுவாக வலியுறுத்தப்பட்ட சில கருத்துக்களுக்கு அரசின் செயல்பாடுகள் சாதகமாக உள்ளதையும் அமைச்சர் குறிப்பிட்டார். மேலும் அவர் குறிப்பாக தமது உரையில், பயிர் காப்பீட்டுத் திட்டம் மாநில அரசால் தமிழகத்திற்கேற்றவாறு கருத்துரு தயாரிக்கப்பட்டு, மத்திய அரசின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், மாநிலத்தில் காலியாக உள்ள மாவட்ட அளவிலான வேளாண்மைத் துறை பதவிகள் விரைவில் பூர்த்தி செய்யப்பட உள்ளதாகவும், மாநிலம் முழுவதும் 28 பண்ணை வானொலி நிலையங்கள் அமைக்கும் திட்டம் நடுவண் அரசின் பார்வைக்கு தமிழக அரசால் அனுப்பப்பட்டுள்ளதாகவும், குளிர்பதன கிடங்குகள் தேவைப்படும் மாவட்டங்களில் அமைத்திடும் கருத்துரு அரசின் கவனத்தில் உள்ளதாகவும், வேளாண் விளைபொருட்களின் குறைந்தபட்ச ஆதார விலை (Minimum Support Price) நிர்ணயிக்கும் பொழுது விவசாயிகளின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும் என்றும் கூறினார். தமிழக அரசின் எதிர்பார்ப்பு விவசாயத் தொழிலில் ஈடுபடுவோர் இருமடங்கு விளைச்சலையும், மும்மடங்கு வருமானத்தையும் பெற்று வேளாண்மையில் என்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பதேயாகும். எனவே, இரண்டாம் பசுமைப் புரட்சி ஏற்பட உழவர்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் பரிந்துரைக்கும் உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் உயர் தொழில்நுட்பங்கள், சந்தை விலை குறித்த ஆலோசனைகள் ஆகியவற்றை பின்பற்றி சந்தை தேவையை அறிந்து உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் விவசாயிகளை கேட்டுக் கொண்டார். தொடர்ந்து 6 மணி நேரம் விவசாயிகளுடன் இருந்த அமைச்சர், திரளாக பங்கேற்று ஆக்கப்பூர்வமாகவும், தெள்ளத்தெளிவாகவும் கருத்துக்களை கூறி பசியென்றும் பாராமல் பங்கேற்ற விவசாய பிரதிநிதிகளுக்கு அமைச்சர் அவர்கள் அரசின் சார்பில் மனமார்ந்த நன்றியையும் தெரிவித்தார். துவக்கத்தில் "தமிழ்நாடு உழவர்கள் கருத்தரங்க வினாக்கள் - விளக்கங்கள்" என்ற நூலினையும் அமைச்சர் வெளியிட்டார்.

திரு. சந்தீப் சக்சேனா, இஆப., வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மை செயலர், வேளாண்மைத் துறை, தமிழ்நாடு அரசு அவர்கள் தமது வாழ்த்துரையில், பல்வேறுபட்ட ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்டுள்ளது என்றும், விவசாயிகளின் ஆலோசனைகளை கருத்தில் கொண்டு மாநில வேளாண் வளர்ச்சிப் பணிகள் அமைய அரசு திட்டம் வகுக்கும் என்றும் கூறினார். மேலும் அவர் தமிழக அரசின் "விஷன் 2013 (Vision 2013)" கொள்கை பதிப்பில் குறிப்பிட்டுள்ளபடி மாநில வேளாண் வளர்ச்சிக்கான அனைத்து செயல் திட்டங்களும் செவ்வனே மேற்கொள்ளப்படும் என்றும், உணவு பாதுகாப்புடன் கூடிய மிகுதியான உணவு உற்பத்தி செய்யும் மாநிலமாக தமிழ்நாடு விளங்கும் என்றும், அதன் மூலம் மகிழ்ச்சியை உழவர்களின் திருமுகத்தில் காண்பதே அரசின் பிரதான நோக்கம் என்றும் கூறினார்.

முனைவர் கு. இராமசாமி, துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் தமது துவக்கவுரையில், அரசின் வழிகாட்டுதலின்படி நீடித்த நிலையான தமிழக வேளாண் வளர்ச்சிக்கு அடிகோலும் கருத்துக்கள் பல்வேறு நிலைகளில் சேகரிக்கப்பட்டு வருவதாகவும், அதன் தொடர்ச்சியாகவே இன்று விவசாயிகளிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெறுவதாகவும் கூறினார். விவசாயிகளின் பல்வேறு கருத்துக்களுக்கு தக்க பதில்களை அளித்த துணைவேந்தர் பயிர்ப் காப்பீட்டுத் திட்டம் (Crop Insurance) சிறப்புற செயல்பட உறுதுணை புரியும் வண்ணம் தொலையுணர்வு மற்றும் புவியியல் தகவல் அமைப்பு (Remote Sensing and GIS) தொழில்நுட்பமானது பிலிப்பைன்ஸ் நாட்டிலுள்ள சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையத்தின் உதவியுடன் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றும், புதிய நெல் இரகங்களை உருவாக்கும் முயற்சி 7 நெல் ஆராய்ச்சி நிலையங்களில் முடுக்கி விடப்பட்டுள்ளது என்றும், இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கும் வண்ணம் பிரத்தியேகமாக பல்கலைக்கழகத்தில் இயற்கை வேளாண்மைத் துறை உருவாக்கப்பட்டு தொழில்நுட்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாகவும் கூறினார். உழவர்கள் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பங்களை தவறாது பின்பற்றி உயர் விளைச்சல் பெற வேண்டும் என்றும், வேளாண் வளர்ச்சிக்கு உதவும் ஆலோசனைகளை ஏற்று செயல்பட பல்கலைக்கழகம் என்றும் தயார் நிலையில் உள்ளது என்றும் துணைவேந்தர் அவர்கள் கூறினார்.

முன்னதாக முனைவர் கா.அ. பொன்னுசாமி, விரிவாக்கக் கல்வி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அவர்கள் கருத்தரங்கிற்கு வந்தவர்களை வரவேற்க, இறுதியாக முனைவர் மா. மகேஸ்வரன், ஆராய்ச்சி இயக்குநர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

மக்கள் தொடர்பு அலுவலர்